DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 315/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 3(LW2)
Defence

Name : Vijaymaran
Father Name /
Husband Name : Jayaalan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 2nd April 2026.

எதிரிகள் ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது விக்கரவாண்டி கெடார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2024 அன்று நான் கோட்டக்குப்பம மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது ஆய்வாளர் அமுதா தலைமையில் அவருடன் நானும் தலைமை காவலர் புஷ்பராஜ் ஆகியோருடன 14.00 மணிக்கு வானூர் கூட்ரோடு அருகே

வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது வானூா ஸ்ரீ திருச்சிற்றம்பலம் கூட்ரோடு மார்க்கமாக வந்த டிஎன்.22 சிவி 6807 என்ற இண்டிகா விஸ்டா காரை நிறுத்தி விசாரித்தபோது காரில் இருந்து ஆஜர் எதிரிகள் இருவரும் தப்பி ஓட முயற்சி செய்தவர்களை மடக்கி பிடித்து விசாரித்துபோது காரை ஓட்டி வந்த ஆஜர் எதிரி தர்மன் உடனிருந்தவர் ஆஜர் டெல்லிபாபு ஆவார்கள். காரை சோதனை செய்தபோது பாண்டிச்சேரி மதுபானங்கள் Budweiser Beer 650ml- 5nos, Kyra Wine 750ml- 1, Mansion House Brandy 750ml- 2Nos, Bacardi 750ml- 1No, Magic mOment 750ml- 2NOs பாட்டில்கள் இருந்தது. மேற்படி பாட்டில்கள் மற்றும் மேற்படி வாகனத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் அ.சா.1 கையொப்பம் 1வதாக உள்ளது. என் கையொப்பம் 2வதாக உள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட Budweiser Beer 650ml- 5nos, Kyra Wine 750ml- 1, Mansion House Brandy 750ml- 2Nos, Bacardi 750ml- 1No, Magic mOment 750ml- 2NOs பாட்டில்களின் புகைப்படம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட வாகனத்தின் 4 புகைப்படங்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு ஆய்வாளர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்குசொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.1186/2024 பிரிவுகள் 4(1)(a) TNP Act, 4(1)(C), 14(A) TNP Amendment ACt எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றும் அதன் பதிவெண்ணையும் ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஓடடி வந்த வாகனத்தை யார் சோதனை செய்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் பாண்டிச்சேரி மதுபானங்களை வாகனத்தில் எந்த இடத்தில்வைத்து எடுத்துவந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால்

சரிதான். சம்பவ இடம் அதிக வாகனங்கள் செல்லும் சாலை மற்றும் மக்கள் நடமாட்டம் மிகுதியாக உள்ள இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக எனது ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் எந்த மதுபானங்களையும் எடுத்து வரவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எனது ஆய்வாளர் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- என்.பிரீத்தி,
நீதித்துறை நடுவர்,
வானூர்.